
# கிராமதானத்தின் மகிமை

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
11 JAN 1957
MADRAS

135
1-57



விநோபா

...ய பிரசுராலயம், தஞ்சாவூர்.
[விலை அணா 2]

M95
N57
425

டிசம்பர் '56--3,000.

## ★ பதிப்புரை ★

ஆரம்பத்தில் கிராமத்தில் நிலமில்லாதவர் ஒருவருமில்லை என்று கூறும்படி நிலம் உள்ளவரிடம் ஒரு பாகம் நிலதானம் கேட்டார் விநோபா. சென்ற ஐந்து ஆண்டில் பூதான இயக்கம் படிப்படியாக வளர்ந்து இன்று கிராமத்தில் உள்ள நிலத்திற்குத் தனி உடைமையாளர் ஒருவருமில்லை என்ற நிலைமையை [illegible]திவிட்டது. சுமார் 1000 கிராமங்களில் [illegible]கள் தனிப்பட்டாக்களை எல்லோரும் கிராம சமுதாயத்திற்குக் கொடுத்துவிட்டார்கள்.

ஆகாசம், வெளிச்சம், காற்று, தண்ணீர், இவைகளுக்குத் தனி உரிமை உண்டா? அதுபோல் நிலத்திற்கும் இல்லை என்று விநோபாஜி ஸ்தாபித்ததை மக்கள் ஏற்றுக்கொண்டுவிட்டார்கள்.

இந்த அதிசயமான கிராமதானத்தின் தத்துவத்தைப் பற்றி விநோபாஜியின் நான்கு உபன்யாசங்களின் தொகுப்பே இது. இதைப்பற்றிய அதிக விபரம் "பூரண கிராமதானம்" என்ற புத்தகத்தில் பார்க்கலாம்.

தஞ்சாவூர்,
27-12-'56.

சர்வோதய பிரசுராலயம்.
(அ. பா. சர்வ சேவா சங்கத்தின் கிளை)

3.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
11 JAN 1957
MADRAS

# கிராம தானத்திற்கு உகந்த தமிழ்நாடு

தமிழ் நாட்டில் பாபாவின் யாத்திரை 1½ மாதமாக நடை
ற்றுக்கொண்டு வருகிறது. ஊழியர்களுக்கு ஒரு முறை
ன்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.
னளில் உங்களுடைய ஒத்துழைப்பும், உதவியுமில்லாமல்
தான இயக்கப் பணி இங்கே நடைபெற முடியாது.
சியில் நடைபெற்ற கூட்டத்திலும் தமிழகத்தில் நடை
றுகின்ற செயல் சமக்கிரமாகவும், பரிபூரணமாகவும்
க்க வேண்டும் என்று கூறியுள்ளேன். சமக்கிரக என்று
ன்னால் பூதான இயக்கத்தோடு எல்லா நிர்மாணப் பணி
ம் சேர்ந்தது என்று பொருள் கொள்ள வேண்டும்.
றகத்தில் எந்த அளவிற்குக் காரியம் செய்ய முடியுமோ
த அளவிற்கு செய்ய வேண்டும்,

11340

## தெலுங்கானாவில் பூதான உதயம்

ஐந்து ஆண்டுகளுக்கு முன்னால் இயக்கம் தெலுங்கானா
தோன்றியது என்பதை அறிவீர்கள். இயக்கம் ஆரம்
வேண்டுமென்ற எண்ணமோ, சங்கல்பமோ அதற்கு
னால் இதயத்தில் தோன்றவேயில்லை. தெலிங்கானாவில்
பட்ட நிலையில், அச்சூழ்நிலையில் பூமிதான இயக்கம்
ற்கையாகவே தோன்றியது. ஒரு கிராமத்திலுள்ள
யில்லாத மக்களுக்கு 80 ஏக்கரா வேண்டுமென்று கேட்
ன். ஒருவர் முன்வந்து 100 ஏக்கரா தானம் தந்தார்.
பவம் எனக்குச் சிறிய விஷயமாகத் தோன்றவில்லை.
ப்பட்ட எண்ணம் உதித்திருப்பின் அன்றே விஷயம்
ிருக்கும். இந்தியாவில் மட்டுமல்லாது, ஆசியா
மையும் நிலப்பிரச்னை இருக்கவே செய்கின்றது.
ய நாட்டினர் தங்கள் தங்கள் வழிகளில் இப்
னக்கு தீர்வு காண்கிறார்கள். ஆனால் அவர்கள் சென்ற
ும், இவையும் பாரதத்திற்கு ஏற்ற வழியுமல்ல, தருதி

YZ
113

யுடையதுமல்ல. எனவே தானம் என்ற முறை ஏற்பட்டிருக்காவிட்டால் நமது நாட்டிற்குத் தகுந்த வழியில் நிலப்பிரச்னை தீர்ந்திருக்காது. தவறான வழியில் அடியெடுத்துவைத்து அவதிப்பட்டிருப்போம். அஹிம்சையின் சக்தியை உணர்ந்தே இக்காரியத்தை மேற்கொண்டிருக்கிறோம். அதனால்தான் இயக்கம் உருவாகிய அன்றைக்கே இந்தியாவில் குறைந்தது 5 கோடி ஏக்கரா தானம் பெறாமல் பிரச்னை தீராது என்ற எண்ணம் எழுந்தது. நிலத்தைக் கேட்பது என்பதும், 5 கோடி ஏக்கரா பெறுவதென்பதும் என்னைப் போன்ற பாமர மனிதனுக்கு கடினம்தான். ஏதோ ஒரு சில ஆயிரம் ஏக்கரா நிலங்கள் பெற்று சிலரைத் திருப்தி அடையச் செய்திருக்கலாம். ஆனால் அஹிம்சையின் சக்தி வெளிப்படாது.

இந்தியாவிற்கு சுதந்திரம்கூட அஹிம்சா சக்தியின் பலத்தினால் கிடைத்தது. காந்தியடிகள் அஹிம்சா வழியை விரும்பியதால் மக்களும் இவ்வழியையே விரும்பினார்கள். காந்திஜியைப் பின்பற்றி ஏதாவது செய்யலாம் என்ற முடிவுக்கு வேறு வழி தோன்றாத காரணத்தினால் வந்தார்கள். அஹிம்சை சக்தி மக்களின் இதயத்தில் ஆழமாகப் பதியவில்லை. அப்படி ஏற்பட்டிருக்குமானால் சுதந்திரம் பெற்றதற்குப் பின்னால் இந்து முஸ்லிம் கலவரம் ஏற்பட்டிருக்காது. எத்தனையோ ஆயிரக்கணக்கான மக்கள் கொலை செய்யப்பட்டிருக்க மாட்டார்கள். ஆயிரமாயிரம் மாதர்கள் அவதிக்குள்ளாகி இருக்கமாட்டார்கள். ஏறத்தாழ 50 லட்சம் மக்கள் அகதிகளாக இங்கிருந்து அங்கும் அங்கிருந்து இங்கும் அலைந்திருக்க மாட்டார்கள். இச்சம்பவங்கள் மிகப் பயங்கரமான சம்பவங்களாகத் தோன்றுகிறது. அஹிம்சையில் நம்பிக்கையிருந்திருந்தால் இப்படிப்பட்ட சோக நிகழ்ச்சிகள் நடைபெற்றிருக்காது. அதனால்தான் காந்தியடிகள் ஒருமுறை "மக்கள் கடைப்பிடித்த அஹிம்சை வேறு வழியில்லாமல் ஏற்றுக்கொள்ளப்பட்ட அஹிம்சை" என்று கூறினார். ஆகையால் சுதந்திரத்திற்குப் பின்னால்

அஹிம்சா சக்தியில் மக்களுக்குப் பக்தி பாவனை ஏற்பட வேண்டும்.

## மக்கள் மொழியிலேயே ஆட்சி

ஒரு நாடு சுதந்திரம் அடைந்ததற்குப் பின்னால்தான் பல பிரசினைகள் முளைத்தெழுகின்றன. சுதந்திரம் பெற்றதற்குப் பின்னால் பொருளாதாரப் பிரசினையும், சமூகப் பிரசினையும் ஏற்பட்டு ஓர்வித சூழ்நிலை அமைகின்றது. இந்தப் பிரசினைகள் தீர்க்கப்படாவிட்டால் சுயராஜ்யம் என்பது நிலைத்து நிற்கமுடியாது. எத்தனையோ ராஜ்யங்கள் தோன்றின; இருந்த இடம் தெரியாமல் அழிந்தன. புரட்சி நடைபெற்றுக்கொண்டே இருக்கின்றது. காரணம் அடிப்படை பிரசினைகள் தீர்க்கப்படாமல் அப்படியே இருக்கின்றன. ஆகையால் அரசியல் சுதந்திரம் விடுதலை பெற்ற நாம் பொருளாதார, சமூகத் துறைகளிலும் விடுதலை பெற வேண்டும். இவ்விடுதலைக்கு அஹிம்சா சக்தி நல்ல பலனளிக்கும் என்பதை நாம் நிரூபித்துக் காட்டவேண்டும். தற்பொழுது எஸ். ஆர். ஸி. ரிப்போர்ட்டு வெளியான பொழுது ஹிம்சையின் சக்தி வெளிப்பட்டது. "இந்த மாகாணம் எனக்குச் சொந்தம், இந்தப் பகுதி எங்கள் பகுதி" என்பதெல்லாம் ஹிம்சையின் சின்னம் என்றுதான் சொல்லவேண்டும். மொழிவாரி மாகாண அமைப்பால் மக்களுக்கு நல்லதுதான். அம்மாதிரி மாகாணங்கள் அமையாவிட்டால் உண்மையான சுதந்திரம் இல்லையென்றுகூட கூறுவேன். ஒரு விவசாயி பேசும் மொழியிலேயேதான் வழக்கு மன்றத்தில் குறிப்பு எழுதப்படாவிட்டால், தீர்ப்பு வழங்கப்படாவிட்டால் உண்மை சுதந்திரம் இல்லையென்றும் எடுத்துரைப்பேன். சுயராஜ்யம் என்று சொன்னால் அந்தந்த மாநிலத்தில், மாநில மக்கள் மொழியிலேயே எல்லா நடவடிக்கைகளும் நடைபெற வேண்டும். சிலர் ஆங்கிலம் இல்லாமல் ஆட்சி முறையும், பிறவும் நடைபெறாது என்று கூறுகிறார்கள். அப்படியானால் ஆங்கிலேயர்களிடமிருந்து

ரசியல் சுதந்திரம் பெறவேண்டும் என்று அவசியமில்லையே! அசோகன் ஆட்சியில் ஹர்ஷரின் காலத்தில், குப்தர்கள் ஆட்சியின்போது விஜயநகர சாம்ராஜ்யத்தில் எல்லாம் மக்கள் பேசும்மொழியிலேயே ஆட்சிமுறை நடந்துவந்தது. ஆங்கில மொழி மகத்துவமும், பெருமையும் வாய்ந்தது, வெளிநாட்டுத் தொடர்புகளுக்கும் வேண்டியதென்பதை ஏற்றுக் கொள்கிறேன். ஆகையால் ஆங்கிலம் இல்லாமல் ஆட்சி நடத்த முடியாதென்பது தவறான கருத்தாகும். ஆனால் ஒரு மொழியின் ஆட்சி ஏற்படுமானால் ஹிம்சை வந்துவிடுகிறது. இப்படிப்பட்ட பிரச்னைகளில் ஹிம்சை தலைகாட்டுகிறது என்பதை எடுத்துக்கூறவே இம்மொழிவாரி மாகாணப் பிரசினையை உதாரணமாகக் கூறினேன்.

## கடவுளை நம்பியே மேற்கொண்டேன்

சுயராஜ்யம் கிடைத்த பிறகு அஹிம்சையைக் கடைப்பிடிப்பது தவிர்க்க முடியாததாகும். ஆகையால்தான் தானம் கிடைத்த அன்றே இப்பணியை என்னால் ஏற்றுக் கொள்ள முடியாதது என்பதைத் தெரிந்தும் இயக்கத்தை நடத்த முன்வந்தேன். அப்பொழுது மற்ற நண்பர்களையோ, அரசியல் தலைவர்களையோ, கலந்து ஆலோசித்திருப்பேனேயானால் இயக்கத்தை ஆரம்பித்திருக்க முடியாது. ஏனெனில் இயக்கம் இம்முறையில் நடைபெற்று, பொருளாதாரப் பிரச்னைக்கு தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கை அப்பொழுது ஏற்படவில்லை. மோட்சம் அடையவேண்டி தவம் செய்பவன் தாய், தந்தையர்களுடன் கலந்து ஆலோசிப்பானா? அப்படி ஆலோசித்தால் அவர்கள் மகனை அனுமதிப்பார்களா? அனுமதிக்க மாட்டார்கள். ஏனெனில் அவர்கள் உலக பந்தத்தில் கட்டுண்டு இருக்கிறார்கள். வியாசருக்கும் கூட மோகம் ஏற்பட்டதால் சுகதேவனை வெளியே போக வேண்டாம் என்று தடுத்தார். ஆகையால் இப்பணியை உள்ளத்திலுள்ள நிஷ்டையோடு, இறைவனை நம்பி மேற்கொள்ளவேண்டியிருந்ததே. மிக சிக்கலான பிரசினை என்

பதால்தான் இயக்கத்தைப் பார்த்து பெரிய மனிதர்கள் வியப்படைந்தார்கள். மேலும் சிக்கல் ஏற்படும் என்று இயக்கத்தின்மீது அவர்களுக்கு நம்பிக்கையே ஏற்படவில்லை என்றாலும் பாபா அவர்கள் கெட்டகாரியத்தைச் செய்யமாட்டார், நல்ல பணியினையே செய்வார் என்ற நம்பிக்கை மக்களுக்கு உண்டு. ஏனெனில் பாபாவின் வாழ்வின் பெரும் பகுதி அஹிம்சா பூர்வமான நிர்மாணப் பணியிலே செலவிடப்பட்டிருக்கிறதென்பதை அறிந்திருக்கிறார்கள்.

## சில ஆக்ஷேபணைகளுக்கு பதில்

பெரிய மனிதர்களுக்கு பூமிதான இயக்கத்தின்மீது கணக்கிலடங்காத சந்தேகங்கள் தோன்றுகின்றன. அதற்காக பாபா கவலைப்படுவதில்லை. துளசிதாஸர், அறிந்து அறிந்து கொஞ்சம் கொஞ்சமாக செய்யவேண்டும் என்று கூறினார். நானும் இப்பெரிய மனிதர்களும் இயக்கத்தை அறிந்து, கொஞ்சம் கொஞ்சமாக காரியமாற்ற வந்துவிடுகிறார்கள் என்று நம்புகிறேன். பூமிதான இயக்கத்தினால் நிலம் துண்டாடப்படுகிறது என்று கூறிவருகிறார்கள். இதற்குப் பொருளாதார நோக்கத்தோடு பதிலளிக்க வேண்டும். "நான் துண்டாடப்படக்கூடிய பேச்சுப் பேச வரவில்லை. இதயங்களை ஒன்று சேர்க்கவே பாடுபடுகிறேன். நிலம் துண்டாடப்படுகிறது என்று கூறுபவர்கள் இதயம் துண்டாடப் படுவதை உணருகிறார்களில்லை" என்று கூறினேன். இதுதான் பரமார்த்திகமான, உண்மையான பதி

பின்னர் "பெரிய மனிதர்கள் செல்வந்தர்கள் தானம் தருகிறார்கள்?" என்று கூறினார்கள். இது வனுடைய மாயையாகும். இறைவன் சிறியவர்களின் ளத்தைப் பெரிதாகவும், பெரியவர்களின் உள்ளத்தைச் சிறிதாகவும் செய்கிறான். இது இறைவனுடைய போக்கிரித்தனம்! இறைவன் இப்படியெல்லாம் செய்து வேடிக்கை பார்க்கிறார்! பெரிய செல்வந்தர்கள் கஞ்சர்களாகி, துவேஷத்திற்குப் பாத்திரமாகி, வருத்தப்படுவதை வேடிக்கை பார்க்கிறார்! ஆகையால் இந்தக் குறையை இறை

வனிடம் கூறுங்கள் என்று கூறினேன். கொடுக்க வேண்டும் என்ற அறிவை ஆண்டவன் யாருக்குக் கொடுக்கிறாரோ அவர்கள் முதலில், கொடுக்க வேண்டும். குரங்குகளின் படை கிளம்பியதால்தான் சுக்ரீவன் வெளிவந்தான். இராமச்சந்திரமூர்த்திக்கு வானர சேனை உதவிதானே முதலில் கிடைத்தது. கிருஷ்ண பகவானுக்கு இடையர்கள்தானே உதவ முன்வந்தார்கள். ஏசுநாதருக்கு செம்படவர்களும், தச்சர்களுமே சிடராகச் சேர்ந்தார்கள். சிறிது நாட்களுக்குப் பின்னர் ஒரு செல்வந்தர் ஏசுநாதரிடம் வந்துசேர்ந்தார். ஏசு "திருடக்கூடாது" என்று உபதேசம் செய்தார். "எப்பொழுதும் திருடுவதில்லையே" என்று பதிலளித்தார். 'அப்படியானால் உன் உடைமையை யெல்லாம் ஏழைகளுக்குக் கொடுத்துவிட்டுவா. ஏனெனில் இரும்புப் பெட்டியின் அருகில்தான் உன் இதயமும் இருக்கிறது" என்று கூறினார். இன்னும் மிகக் கடுமையான உபதேசத்தைக்கூட ஏசு கூறினார். "ஊசிக்காதில் ஒட்டகம் நுழைந்தாலும் செல்வந்தர்களுக்கு மோட்சத்தில் இடம் கிடையாது" என்று கூறினார். ஏசுவின் நிலையே இப்படி இருக்கும்பொழுது பாபாவின் நிலை எப்படி இருக்கும்? மக்கள் ஆட்சேபணைகள் செய்வது கண்டு மகிழ்ச்சியுறுகிறேன். ஏனெனில் அவைகளை அப்படியே "சுவாகா" செய்துவிடுகிறேன்! ஒன்றரை லட்சம் ஏழை விவசாயிகள் தானம் கொடுத்த பின்னர், சூழ்நிலை மாறிய பின்னர் செல்வந்தர்கள் தானம் கொடுக்காமல் இருப்பது நல்லதல்லவென்பதை உணர்ந்து கொடுக்க ஆரம்பித்தார்கள்.

௫

அதற்குப் பின்னர் "பணக்காரர்கள் மோசமான பாழ் நிலங்களைத் தருகிறார்கள்" என்ற ஆட்சேபணையைக் கிளப்பினார்கள். "மோசமான நிலங்களைக் கொடுப்பதால் கொடுப்பவர்களுக்கு தோஷமல்ல, வாங்குபவர்களுக்குத்தான்" என்று சொன்னேன். டில்லியில் திட்டக் கமிஷனிடம் என்னுடைய கருத்தை எடுத்துக் கூறிவரச் சென்றபொழுது ஒரு தலைவர் "இதய மாற்றத்தில் காரியம் நடைபெறுவது

நல்லதுதான். ஆனால் நிலச்சுவான்தார்கள் தரிசு நிலங்களைத்தான் தானம் தருவார்கள்" என்று கூறினர். "ஆற்றில் வெள்ளம் வரும்பொழுது ஆரம்பத்தில் எல்லாக் கழிவுகளும் சேர்ந்து அழுக்கு நீர்தான் வரும். பின்னர் நல்ல நீர் வருவதுபோல முதலில் தரிசு நிலங்களைத் தருகிறார்கள். பின்னர் நல்ல நிலங்களை, நன்செய் நிலங்களை, விளை நிலங்களைத் தானம் தருவார்கள்" என்று விளக்கம் கொடுத்தேன். ஒரு கூட்டத்தில் "போசமான மண் என்பதே கிடையாது; யாராவது தன் தாயை அழகில்லாதவள் என்று கூறுவார்களா? தாய் எப்படி இருந்தாலும் குழந்தை விரும்புகிறது. அதன் கண்களுக்கு அழகாகவே தென்படுகிறாள். கிருஷ்ணன் ருக்மணியை ஏற்றுக்கொண்டதில் தான் அவனது பெருமை இருக்கிறது. அதைப்போல பாபா தரிசு நிலத்தையே முதலில் கேட்கிறார். இருக்கின்ற தரிசு நிலங்கள் முழுவதையும் தந்துவிடுங்கள்' என்று கூறினேன். தரிசு நிலங்கள் என்று கூறுகிறவர்கள் என் தரிசு நிலங்களை வைத்திருக்கிறார்களோ தெரியவில்லை. கல்லும் மண்ணும் கலந்த பூமியைக் கொடுத்துவிட்டு கல்லும் மண்ணும் கலந்த பூமி என்று கூறுகிறார்கள். வேண்டுமானால் பாபாவிற்கு இமய மலையைத் தானம் தரட்டும்! அப்பொழுது பாபா என்ன செய்கிறார் பாருங்கள்! யமுனையையும், கங்கையையும் கட்டுப்படுத்திவிடுவார்!! (சிரிப்பு) எனவே பாரதத்தில் இருக்கின்ற எல்லா நிலங்களையும் பண்படுத்த வேண்டும். பீஹாரில் பல ஜமீன்தார்கள் அதிக அளவில் தானம் தந்து இயக்கப் பொறுப்பையே ஏற்றுக் கொண்டுவிட்டார்கள். ஏறத்தாழ 50,000 பெரிய நிலச்சுவான்தார்களும், ஜமீன்தார்களும் தானம் தந்து பூமி தானப் பணியை மேற்கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது இறைவன் விழித்துவிட்டான். இதுவரை நடந்த காரியங்கள் பள்ளி எழுச்சிப் பாடுதலே! விழித்துவிட்ட இறைவன் இனி தானாக வேலை செய்ய ஆரம்பித்துவிடுவான். ஆஸ்டிரேலியாவைப் பாருங்கள். எவ்வளவு பெரிய தேசம்! அங்கு ஜனத்தொகை மிகக் குறைவு. சிறு ஜப்பான் மக்

களை அனுமதிப்பதில்லை. ஒரு சாரார் ஒரு நாட்டினின்று உடைமை கொண்டாடுவது இறைவனுக்குச் செய்கின்ற துரோகமாகும். இந்தக் கருத்து சிறிய அளவிலும், பெரிய அளவிலும் இருக்கின்றது, ஆனால் விஞ்ஞான யுகத்தில் நிச்சயமாக நிலைத்திருக்க முடியாது. தமிழகத்தின் பிரஜை எப்படி பாரதத்தின் பிரஜையாக இருக்கிறாரோ அப்படி எல்லா மக்களும் உலகப் பிரஜையாக வேண்டும். பூமிதான இயக்கம் இவ்வித பரந்த நோக்கமுடையது. இப்பொழுது ஒரிஸ்ஸாவில் ஆயிரத்திற்கு மேற்பட்ட கிராமங்களில் வாழும் மக்கள் உடைமையை விட்டுவிட்டார்கள். சர்வ சேவா சங்கமும், தாலிமி சங்கமும், கஸ்தூரிபா சங்கமும் மற்றும் பல நிர்மாண ஸ்தாபனங்களும் சேர்ந்து கிராம ராஜ்யத்தை உருவாக்கும் வேலையில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

## கிராமதானத்திற்கு உகந்த தமிழ்நாடு

தற்போது தமிழகத்தில் அடுத்த அடி வைக்க விரும்புகிறேன். நீங்கள் எல்லோரும் ஒத்துழைத்தால் அந்தக் காரியம் பூர்த்தியடைந்து முன்னால் செல்வேன். அந்தக் காரியம் என்பது பூமிதான இயக்கப் பணியோடு கிராமக் கைத்தொழிலை வளர்ப்பதும், ஆதாரக் கல்வியும், ஜாதி வித்தியாசத்தைப் போக்குதலின் அவசியத்தை வற்புறுத்துவதும், கதர் திட்டத்தை ஏற்று கதர்ப் பிரசாரம் செய்வதும் தான். தமிழ்நாட்டில் முன்னர் கதர் வேலை நடந்து வந்தது. இப்பொழுது கிராமோதயக் காரியமும், ஆதார கல்வியும் நடைபெற்று வருகிறது. ஆனாலும் அதன் எல்லைகளுக்கு இன்னும் போகவில்லை. தமிழ்நாட்டில் கிராமதானத்திற்கு நல்ல சூழ்நிலை இருக்கின்றது. உண்மையான கிராம பாவனையை ஒவ்வொரு கிராமத்திலும் பார்க்கிறேன்.

சிறிய கிராமமாயிருந்தாலும் பெரிய கோவிலைப் பார்க்கிறேன். இங்கே கிராமத்திலிருக்கின்ற சிறிய கோவில்கூட இந்தியாவிலிருக்கும் பெரிய கோவிலுக்குச் சமமாகும். எப்படிப்பட்ட கோவிலைக் கட்டினாலும் பக்தி ஏற்படுவது ஒரே மாதிரியாக இருக்கும். இவ்வளவு கோவில்களை ஏன்

கட்டினார்கள்! எந்த பாவனையோடு கோவில் ஏற்பட்டதோ அந்த பாவனை இங்கு இல்லாமற் போய்விட்டது. நம்முடைய வாழ்வு முறை எப்படி அமைய வேண்டும் என்பதைக் கோவில்கள் உணர்த்துகின்றன. மாணவர்கள் முன்னர் கோவில்களில் இரவு நேரங்களில் உறங்கி காலையில் எழுந்து கல்வி பெற்றார்கள். அதனால்தான் "ஸ்கூல்" என்ற சொல்லிற்கு பள்ளிக்கூடம் என்று தமிழில் சொல்லுகிறார்கள். வேறு மொழிகள் இவ்வளவு சிறந்த பொருள் இருப்பதாகத் தெரியவில்லை.

நாம் இருக்கின்ற எல்லா உடைமைகளையும் இறைவனிடம் அர்ப்பணித்து அவனது பிரசாதத்தை சாப்பிட வேண்டுமே யல்லாது உடைமை என்று அதிலிருந்து சாப்பிடக்கூடாது. பூமிதான இயக்கத்தைப்பற்றி பேசுகின்றீர்களே தவிர கதரைப்பற்றிப் பேசவில்லையே. காந்தியடிகள் கதரைத் தீவிரமாக பரப்பினாரே என்று கூறுகிறார்கள். கதரைப்பற்றி பிரசாரம் செய்ய பாபாவிற்கு கற்றுக்கொடுக்க வேண்டாம். ஒரு விவசாயி கிணறு தோண்ட ஆரம்பித்தாலும், அப்பொழுது ஒருவன் விவசாய வேலையை விட்டுவிட்டு கிணறு தோண்டும் வேலையைச் செய்கின்றாயா? என்று கேட்டாலும். அந்தக் கதையைப் போலவே இவர்கள் கேள்வி கேட்பதும் இருக்கின்றது. கிணறு வெட்டினால்தானே வயல் வளமாக இருக்கும். காடு, கழனியாகும். இன்று உலகத்திலிருக்கின்ற கோடிப் பிரச்னைகளைத் தீர்க்காவிட்டால் கதர்ப் பிரசாரம் எவ்வளவு நான் செய்தாலும் காரியம் நடைபெறாது. காந்தியடிகள் கதரை சுதந்திரத்தோடு இணைத்ததால்தான் கதருக்கு மதிப்பு ஏற்பட்டது. மில் துணி அணிபவர்களையும் தாயக விடுதலைக்கு தகுதியுடையவர்கள் என்று அன்று காந்தியடிகள் கருதியிருப்பாரானால் ஒருவரும் கதரை அணிய முன் வந்திருக்கமாட்டார்கள். அதைப்போல நிலப் பிரச்னையோடு கதரை இணைத்தால்தான் கதர் வேலையும் நன்கு நடைபெற முடியும். கிராமத்தில் கதர் உற்பத்தியாகும்பொழுது வெளித் துணிகளுக்கு

அவசியமின்றிப் போய்விடும். 20 வருடங்களாக கதர் வேலை செய்துகொண்டு வருகிறோம். ஆனால் எங்கு கதர் உற்பத்தியாகின்றதோ அங்கேயே அது உபயோகப்படுவதில்லை. ஆகையால் நிலப் பிரச்னை முக்கியமான பிரச்னையாக நம் முன் நிற்கின்றது. மக்கள் இப்பொழுது இப் பிரச்னையைத் தீர்க்கவே விரும்புகிறார்கள்.

## கிராமத்தின் சங்கல்ப சக்தி

எல்லா நிலங்களும் கிராம உடைமையாகும்பொ[illegible] ஓர் பாவனை ஏற்படுகின்றது. அப்பொழுது மக்கள் [illegible]கல்பம் செய்துகொள்வார்கள். கோராபுட் கிராம[illegible] மக்கள் கிராமராஜ்யத்தை உருவாக்க சங்கல்பம் செ[illegible] கொண்டுவிட்டார்கள். பசு மாட்டு மாமிசம் மலிவு [illegible]ரு லும் இந்துக்கள் கையால்கூடத் தொடமாட்டார்[illegible] ஏனெனில் அவர்கள் பசு மாதா வென்று கூறி அப்புலால் உண்பதில்லையென்று சங்கல்பம் செய்துகொண்டார்கள். சங்கல்பம் செய்யும்போது எல்லோரது சக்தியும் ஒன்று சேருகிறது என்பதற்கு ஒரு உதாரணத்தையே கூறினேன். அதைப்போலவே கிராம மக்கள் சங்கல்பம் செய்துகொள்வார்களேயானால் வெளித் துணி மலிவாக இருந்தாலும் வாங்கமாட்டார்கள். எனவே சமூக ரீதியில் கதர் அபிவிருத்தி செய்ய வேண்டுமானால் இரண்டே வழிகள்தான் இருக்கின்றன. 1. சர்க்கார் மில்களை மூடி கதர் வேலையை எடுத்துக்கொள்ள வேண்டும். மற்றொன்று கிராம மக்கள் ஆலைத் துணிகள் அணிவதில்லையென சங்கல்பம் செய்[illegible] கொள்ள வேண்டும். பாபா கதர் வேலையை விட்டுவி[illegible]வில்லை. பூமிதான இயக்கத்தின் அடிப்படையில் கத[illegible]ம நிலைத்து நிற்க முயற்சிக்கிறேன். ஆகையால் நம்முடைய எல்லா சக்திகளும் ஓர் மையப்புள்ளிக்கு வந்தாக வேண்டும். வங்காளத்தில் ஒரு ஆசிரமத்தில் இரண்டு நாட்கள் தங்கியிருந்தபொழுது பக்கத்து கிராமம் ஒன்றுக்குச் சென்றேன். அந்த கிராம நிலங்கள் அடுத்த கிராமத்தில் வாழ்கின்ற ஒருவருக்குச் சொந்தமாக இருக்கின்றது. ஆசி

சமத்தில் இருக்கிறவர்கள் ஏன் அவர்களும் சென்று நிலம் கேட்கக்கூடாது என்று கேட்டேன். ஆசிரமத்தில் அதிக வேலையாய் இருக்கிறது என்று சொன்னார்கள். அவர்கள் சோம்பலாக இல்லையென்பதை ஒத்துக்கொள்கிறேன். ஆனால் காந்தியடிகள் திரும்பத் திரும்ப எடுத்துக்கூறிய சமக்கிரக புத்தி இல்லை என்று கூறுகிறேன். ஆகையால் எவ்வளவு நிர்மாண ஸ்தாபனங்கள் இருந்தாலும் அவைகள் எல்லாம் பூமி பிரசினையின் அடிப்படையில்தான் காரியமாற்ற வேண்டும். காந்தியடிகளுக்கு நிச்சயமாக பூமிதான இயக்கத்தின்மீது பூர்ணமான திருப்தி ஏற்படுமென்பதில் சந்தேகமில்லை. ஆகையால் காந்தீயத்தில் அஹிம்சையில் நம்பிக்கை உள்ளவர்கள் அனைவரும் பூமிதான இயக்கத்தில் பங்கு கொண்டு பணியாற்ற வேண்டும். எல்லா நிர்மாணத் திட்டங்களையும் இணைத்து பூமிதான இயக்கம் நடைபெற வேண்டும்.

பூமிதான இயக்கம் பாபாவின் பணியல்ல. உங்களுடைய பணியில் உதவி செய்யவே பாபா வந்திருக்கிறார். நான் உங்களுக்கு ஒரு பூர்த்தி செய்யப்படாத செக் கொடுக்கிறேன். எத்தனை நாட்கள் பாபாவை பயன்படுத்த விரும்புகிறீர்களோ அத்தனை நாட்கள் பயன்படுத்திக்கொள்ளுங்கள். பாரதத்தின் தெற்கு எல்லையிலிருந்து வடக்கு நோக்கி திரும்புவதற்குள் இயக்கத்தின் கடைசி காரியம் வரை நடந்தாக வேண்டும். இங்கே பரிபூரண வேலை நடைபெற்ற பின்னர்தான் வடக்கு திசை நோக்கித் திரும்புவேன். தார்மீகப் புருஷர்கள் கங்கை நீரைக் கொண்டு வந்து ராமேஸ்வரத்தில் அபிஷேகம் செய்வார்கள். பின்னர் அங்கிருந்து தீர்த்தம் எடுத்துக்கொண்டுபோய் காசி விஸ்வநாதருக்கு அபிஷேகம் செய்தால்தான் யாத்திரை பூர்த்தியடைந்ததாகக் கருதுவார்கள். தமிழகத்தில் சமக்கிரக ராமராஜ்யத்தை ஏற்படுத்த விரும்புகின்றேன். ஆகையால் எல்லோருடைய முழு சக்தியும் கிடைத்தாக வேண்டும். எல்லோரும் ஒன்றுபட்டு தங்கள் தங்கள் பங்கை பகிர்ந்து கொண்டு பணிசெய்ய வேண்டும். ஒவ்வொருவரும் நல்

வொரு ஜில்லாவின் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

## வயலூர் கிராமதானம்

வயலூரில் கிராமராஜ்யம் உதயமாகிவிட்டது. சகோதரர் ராமகிருஷ்ண ரெட்டியார் தன்னுடைய அதிகப்பட்ச நிலங்களை நிலமில்லாதவர்களுக்குக் கொடுத்துவிட்டார். செங்கற்பட்டு ஜில்லா யாத்திரை முடிந்தவுடனே "ஏன் நீங்கள் ஜீவன்தானம் செய்யக்கூடாது. பக்கத்து கிராமங்களுக்குச் சென்று பூமிதான, கிராமதான கருத்துக்களை எடுத்துச் சொன்னால் எவ்வளவு நன்றாக இருக்கும்" என்று அவர்களிடம் கேட்டேன். அவர் ஜீவன்தானமே தந்துவிட்டார். ஆகையால் என் சம்பந்தப்பட்டவரையில் பூமிதான இயக்கக் காரியமும் பூர்த்தியாகிக்கொண்டு வருகிறது என்று உணருகிறேன். இப்பொழுது மற்ற நிர்மாணத் திட்டங்களையும் எடுத்துக்கொண்டிருக்கிறேன். இங்கே வந்திருக்கின்ற சகோதரர்கள் இயக்கப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும். அரசாங்கத்தின் ஆதரவும் இயக்கத்திற்கு இருக்கிறது. அரசாங்கத்தின் நிறம் இப்போது மாறிக்கொண்டு வருகிறது. சமுதாய நலத்திட்ட அதிகாரிகளும் உதவி தருவது கண்டு மகிழ்கின்றேன்.

சகோதரர் ஜெகந்நாதன் (தமிழ்நாடு பூதான கமிட்டி கன்வீனர்) ஒரு சூன்யம்; அவருடைய சமிதியும் சூன்யம்; சைபர்; இந்தச் சூன்யத்திற்கு முன்னால் எத்தனை எண்கள் சேர்க்கின்றோமோ அதனைப் பொறுத்துத்தான் இயக்கம் தீவிரமாக நடைபெறும். சைபருக்கு முன்னால் 4 சேர்த்தால் 40 என்று ஆகும். ஜெகந்நாதன் தனியாக இருந்தால் சூன்யமும் தனியாகத்தானிருக்கும். இதனை உணர்ந்து எல்லா ஊழியர்களும் காந்திஜி பாதையில் கருத்தும், கவனமும் கொண்டோர், அஹிம்சா சக்தியின்மீது அசைக்க முடியாத நம்பிக்கைக் கொண்டோர் அனைவரும் இந்த இயக்கப் பணியில் ஈடுபட வேண்டும்.

(திண்டிவனம்—3—7—'56)

113424

# முதல் கிராமதான வயலூரில் வினோபாஜியின் பிரசங்கம் (17--5--'56)

தமிழ்நாட்டின் முதல் கிராமதானத்திற்கு வந்திருக்கிறேன். இங்கு வசிக்கும் மக்கள் அன்புடன் வாழக்கற்று, பிறருக்கு அன்புடன் வாழக் கற்றுக்கொடுப்பார்கள். அக்கம் பக்கத்து கிராமங்கள் இனி இக்கிராமத்தின் வளர்ச்சியைப் பார்த்து பின்பற்ற ஆரம்பிக்கும். இந்த கிராமத்து மக்கள் எதையும் இழந்துவிட்டார்களா அல்லது அடைந்துவிட்டார்களாவென்று கவனித்துக் கொண்டிருப்பார்கள். இந்த கிராமத்து மக்கள் ஆனந்தமடைந்து, வாழ்வில் உயரும்பொழுது மற்ற மக்களின் மனமும் மாறிவிடும். செல்வம் அதிகரித்தால் மட்டும் பெருமை ஏற்படாது. அன்பையும், ஒழுக்கத்தையும், சீலத்தையும் பொருத்தே நம் பெருமை வளரும். அதோடு லட்சுமியும் விருத்தியடைய வேண்டும். லட்சுமி விஷ்ணுவிற்கு தாசியாக இருந்தால்தான் பெருமையுண்டு. விஷ்ணுவிடமிருந்து பிரிந்த லட்சுமிக்கு என்றைக்கும் பெருமை ஏற்படுவது கிடையாது; அவருக்கு மக்கள் தனி மதிப்புக் கொடுக்கமாட்டார்கள். தருமம் என்பது பரமாத்மா; செல்வம் பரமாத்மாவின் காலடியில் இருக்க வேண்டும்.

இந்த கிராமத்தில் ஒருவர் மற்றொருவருடன் சேர்ந்து உழைக்கிறார்கள், சண்டையின்றி ஆனந்தமாக வாழ்கின்றார்கள் என்றால்தான் இதன் புகழ் நான்கு பக்கங்களிலும் பரவும். ஒருவருக்கு ஆபத்து என்றால் எல்லோரும் உதவ ஓட வேண்டும். பாரதியார் "தனியொருவனுக்கு உணவில்லையெனில் ஜகத்தினை அழித்திடுவோம்" என்று சொல்லியிருக்கின்றார். ஒரு மனிதர் கஷ்டப்பட்டுக்கொண்டிருப்பதை மற்றவர்கள் பார்த்துக்கொண்டிருக்கக்கூடாது. இந்த கிராமம் எல்லா வழிகளிலும் முன்னேற வேண்டும். சேர்ந்து பூமிதான இயக்கம் அன்பு முறையில் இயங்கி

செயல்படும் இயக்கம் என்று சொன்னேன். கருத்தினை அன்பு முறையில் எடுத்துச் சொன்னால்தான் பரவ முடியும். இந்த ஊரில் எந்த அறிவு உதயமாகி இருக்கிறதோ அந்த அறிவின் கதிர்கள் எல்லாத் திசைகளிலும் பரவட்டும்; முதலில் அடியெடுத்துவைத்து முன்னேறுபவருக்குத்தான் தைரியம் வேண்டும். அங்ஙனம் ஒருவர் அடியெடுத்து வைத்து முன்னேறி நடை போட ஆரம்பித்துவிட்டால் மற்றவர்கள் பின்பற்ற ஆரம்பித்துவிடுவார்கள். "தமிழ் நாட்டில் கிராமதானம் கிடைப்பது கடினம் என்று எண்ணுகிறார்கள். இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் சகோதரர் ஜெகன்னாதன் அவர்களுக்கு "தமிழ்நாட்டில் கிராமதானம் கிடைப்பது எளிது" என்று எழுதியிருக்கிறேன். ஏனெனில் நான் படித்த தமிழ் இலக்கியங்களில் "ஒப்புரவு, அன்பு" என்ற கருத்துக்களே இடம் பெற்றிருக்கின்றன. ஒப்புரவு அன்பின் அடிப்படையிலேயே தமிழ் இலக்கியங்களில் எழுதப்பட்டிருக்கின்றன என்றுகூடச் சொல்லலாம்.

★

## கிராமதானத்தின் லட்சியம்

உங்கள் கிராமத்தைப்பற்றி ஓரளவு தெரிந்துகொண்டேன். ஆசிரமத்தில் வாழ்ந்தபொழுது பல ஆண்டுகளாக உழைத்து அதை சுயதேவைப்பூர்த்தியுடையதாகச் செய்ய முயற்சி செய்தேன். என்னுடன் பல வாலிபர்கள் நாள் முழுவதும் உழைத்து ஒத்துழைத்தார்கள். நன்று உழைத்து பரிசுத்தமான வாழ்வு நடத்த முயற்சி செய்தோம். ஆசிரமத்தில் எவ்வளவு வேலைகள் நடைபெற்றனவோ அதைவிட அதிகமாக கிராமத்தில் நடைபெற முடியும். ஏனெனில் கிராமத்தில் நூறு, இருநூறு பேர்கள் வாழ்கிறார்கள்; ஆசிரமத்தில் உணர்ச்சி பெற்ற ஒரு சிலர் தான் இருந்தார்கள்; அதற்கு மதிப்பு உண்டு. ஆனால் கிராமத்தில் வாழ்க்கை மாறுதல் என்ற முறையில் நல்ல காரியங்கள் பல நடைபெற முடியும். நான் மேற்கொண்டு யாத்

திரை செய்யாவிட்டால் இந்த கிராமத்திலேயே பேசாமல் தங்கிவிடுவேன். ஆனால் இன்றைக்கு யாத்திரை செய்வது தான் எனது தருமம் என்று எண்ணுகிறேன்; இன்றைய தேவை என்று நம்புகிறேன். சாஸ்திரக்காரர்கள் நான் யாத்திரை செய்யவேண்டும் என்றுதான் சொல்லுகிறார்கள். இப்பேர்ப்பட்ட இடத்தில் ஊழியர்கள் இருக்கக்கூடும். ஆனால் அவர்கள் இந்த கிராமத்தாராக இருக்கவேண்டுமே தவிர வெளியிலிருந்து வரக்கூடாது. உண்மையில் இந்த கிராம மக்கள் அனைவரும் ஊழியர்கள்தான். கிராமதானம் செய்த பின்னர் இந்த கிராமத்தில் தனியுடைமை இனி ஏற்படக்கூடாது. ஜாதி வர்க்க பேதங்கள் தலைகாட்டக்கூடாது. முழு கிராமமும், எல்லா மக்களும் ஒரே குடும்பம் என்ற உணர்வு பெற வேண்டும். வசதிகள் ஏற்பட வேண்டும் என்பதற்காக இப்பொழுது நிலங்கள் 5 பண்ணைகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. ஐந்து ஆறு குடும்பங்கள் ஒன்று சேர்ந்து ஒவ்வொரு பண்ணையிலும் வேலை செய்கிறார்கள். இதனை நல்ல பரிசோதனை என்றே எண்ணுகிறேன். இதனால் கிராம நிலங்கள் ஐந்து உடைமையாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றனவென்று தவறாக அர்த்தம் கொள்ளக்கூடாது. ஐந்து பண்ணைகளாக இன்று வசதிக்காகப் பிரிக்கப்பட்டிருந்தாலும் கிராமம் முழுமையும் ஒரே பண்ணை என்பதை அறிந்துகொள்ளுங்கள். ஒரு பண்ணையில் குறைவாக உற்பத்தியானால் அதிகமாக விளைந்த பண்ணையிலிருந்து உதவி கிடைக்கும். கணக்கிற்காக இன்று கூடத் தனித் தனி பண்ணைகளின்மீது இருந்தாலும் எல்லாம் கிராமக் கூட்டாகவே கருதுகிறோம். கடைசியில் அரசாங்கம்கூட இக்கிராமத்தை ஒரே குடும்பமாக ஏற்றுக்கொள்ளும். அரசாங்கத்திற்குரிய வரியினை கிராமம் செலுத்தும்.

## கிராமத்தில் கல்வி முறை

ஒரு புதிய ஏற்பாட்டை ஏற்றுக்கொண்டுவிட்டோம். ஆதலால் அதன் புதிய கருத்தினைப் புரிந்து நிலைநாட்ட முயற்சி செய்ய வேண்டும். இந்த கிராமப் பள்ளிக்கூடத்

தில் ஒரு மணி நேரப் படிப்புத்தான் சொல்லித்தர வேண்டும். அடுத்த ஊரில் 5 மணி நேரம் கற்றுக்கொடுக்கிறார்களே என்று கவலைப்படக்கூடாது. நம்முடைய பள்ளியில் 2, 3 வருட படிப்பு என்ற கால வரையறையும் இருக்கக் கூடாது. காலையில் நடைபெறும் பள்ளியில் 18 வயதுவரையுள்ளவர்கள் பயில வேண்டும். மாலைப் பள்ளிக்கூடத்திற்கு மாணவர்கள் மட்டுமல்ல, எல்லா கிராமப் பெரியோர்களும் வர முயற்சி செய்ய வேண்டும். மாலை வகுப்பில் நாம் எந்த அறிவைப் புகட்டுகிறோமோ அந்த அறிவு கதையின் மூலமாக, வேடிக்கையின் மூலமாக, பண்டை, தற்கால பெரியோர்களின் வரலாறுகளை விளக்குவதன் மூலமாக சரித்திரங்களின் மூலமாக பஜனைகளின் மூலமாக புகட்டப்பட வேண்டும். பக்தியை ஏற்படுத்துவதே மாலைப் பள்ளியின் முக்கிய நோக்கமாக அமைய வேண்டும். மாடுகளை வைத்துக்கொண்டு வேலை செய்வதைவிட இயன்றளவு கையினாலேயே விவசாயம் செய்வது சிறந்தது என்று சிபார்சு செய்கிறேன்.

## விவசாயமும் கைத்தொழிலும்

ஜப்பானில் கையினால் விவசாயம் செய்வதால் இந்தியாவில் விளைவதைவிட நான்கு ஐந்து மடங்கு அதிகம் விளைகின்றது. அதனால் உடல்வளமும் ஏற்படும். விதை விதைத்தல், நாற்று நடுதல் போன்ற விவசாய வேலைகளையும் நன்கு செய்ய முடியும்; அதனால் அதிக விளைச்சல் கிடைக்கும். கிராமத்தில் பசு பரிபாலனம் நடைபெற வேண்டும். அத்துடன் காளை மாடுகளையும் வளர்க்க வேண்டும். இவ்வாறு நாம் காளை மாடுகளை விற்க வேண்டுமேயல்லாது வெளியிலிருந்து வாங்கக்கூடாது. இம்மாடுகளின் சாணங்கள் நல்ல உரமாகிவிடுகிறது. எல்லோரும் நூற்க வேண்டும். பெண்களின் சேலைகள் தங்கள் கையினாலேயே நெசவு செய்யப்பட்ட நூலினால் நெய்யப்பட்டதாக இருக்க வேண்டும். என்னுடையது, உன்னுடையது என்ற பேதம் அகல வேண்டும்.

# "ஆண்டவனின் ஆக்ஞை"

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் தனியுடைமை இல்லா கிராம உடைமையாக்கும் கிராமதானம் என்றால் நம்பமாட்டார்கள். ஆனால் இன்று எல்லோரும் ஒப்புக்கொள்ளக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டு வரவேற்கத்தக்க நிலையில் காரியம் நடைபெற்றிருக்கிறது. நான் இத்தகைய சூழ்நிலைக்கும், ஏற்பாட்டிற்கும் உணர்ச்சி கொடுக்க வேண்டிவரும் என்று கனவில்கூட நினைத்ததில்லை. ஆசிரமத்தில் தொண்டு செய்வதிலேயே திருப்தி அடைந்தேன். இது ஈசுவரனுடைய திட்டம்; அவனுடைய பிரேரணை; அவனது கட்டளை. பலர் மக்கள் வாழ்நாளில் நடைபெற்ற முக்கிய நிகழ்ச்சிகளைக் கொண்டு வாழ்க்கைச் சரித்திரம் எழுதுகிறார்கள். ஆனால் எதிர்காலத்தில் என்ன நடக்கும் என்று அவர்களால் எழுத முடிவதில்லை. அதைப்போலவே கிராமதானத்தைப்பற்றி முன்கூட்டி நான் சிந்தித்ததே கிடையாது. நான் திட்டமிட்டுச் செய்திருந்தால் "நான்" செய்தேன் என்ற அகங்காரம் ஏற்பட்டிருக்கும்; ஆனால் ஆண்டவனல்லவா கட்டளையிட்டிருக்கிறான். எனக்கு உணர்ச்சியைக் கொடுத்து செயவில் ஈடுபடத் தூண்டிய இறைவன் உங்களுக்கும் கொடுப்பதற்குரிய உணர்ச்சியைக் கொடுப்பான். ஐந்து வருடமாக யாத்திரை செய்தும் சிறிதும் களைப்பே இல்லை. மனதிற்கு பரம ஆனந்தம் ஏற்பட்டிருக்கிறது. அன்பினால் ஆத்மாவிற்கு சாந்தி கிடைக்கிறது. இந்த கிராமத்து மக்களும் பரம ஆனந்தம் அடைய வேண்டும். ஈசுவரனுக்காக எல்லாவற்றையும் அர்ப்பணிக்கும்பொழுதுதான் ஆனந்தம் ஏற்படுகின்றது. எல்லாவற்றையும் விட்டு விட்டு ஒரு நாள் இவ்வுலகத்தை விட்டுப் போகிறவர்கள் தானே? (மழை பெய்ய ஆரம்பித்தது) இப்பொழுது பகவான் தன்னுடைய மழைத் துளிகளினால் உங்களை ஆசிர்வதிக்கிறான்.

# கிராமதானத்தின் மகிமை

இன்று உங்கள் கிராமத்து மக்களிடம் பேசிக்கொண்டிருந்தபொழுது கிராம உடைமையில் 1/6 பாகம் தானம் தரத் திட்டமிட்டு வேலை செய்து வருவதாகத் தெரிவித்தார்கள். இச் செய்தி எனக்கு உண்மையில் மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுத்தது. அங்ஙனம் தரப்படுகின்ற நிலம் உங்கள் கிராமத்தில் வாழும் நிலமில்லாத சகோதரர்களுக்குக் கொடுக்கப்படும் என்பதனையும் அறிந்திருப்பீர்கள். இதனால் கிராமத்தில் அன்பு பாவனையும், ஒற்றுமை பாவனையும் வளர்ந்தோங்கும். நீங்கள் கிராமதானமாகவே தர சிந்தித்து வருவது கிராமதானப் பாதை திறந்துவிட்டது என்பதனையே காட்டுகின்றது. உங்கள் ஊருக்கு அருகில் தமிழ்நாட்டில் முதல்முதலாக உருவாகிய கிராமதானம் (வயலூர்) உங்கள் உள்ளங்களில் உணர்ச்சியைத் தூண்டிவிட்டிருக்கிறது. ஒரிஸ்ஸாவில் பெருவாரியான அளவிலும், பீகார் போன்ற மாகாணங்களிலும் இன்றுவரை ஆயிரத்திற்கு மேற்பட்ட கிராமதானங்கள் கிடைத்திருக்கின்றன. கிராமதான வழி திறக்கப்பட்டதுடன் இப்பொழுது பாதையும் செப்பம் செய்யப்பட்டு வருகின்றது. இருப்பினும் நீங்கள் நன்கு ஆலோசித்து செய்யுங்கள். கிராமதானமென்றால் ஊரிலுள்ள மக்களுக்கு ஒரே இடத்தில் சமைத்துப் போடுவது என்பதல்ல. ஒவ்வொரு குடும்பமும் தங்கள் தங்கள் வீட்டில் சமைத்தாலும், ஒரு வீட்டில் குறைவு ஏற்பட்டதென்றால் நிறைவு செய்யவேண்டியது கிராமத்தின் பொறுப்பாகும். இனி தனித்தனியாக கடன் வாங்க மாட்டார்கள். இதுவரை தனிப்பட்டோர் வாங்கிய கடன் கிராமக் கடனாகிவிடும். ஒரு குடும்பத்தில் தந்தையும், தாயும் தங்கள் குழந்தைக்கு மணம் நிச்சயம் செய்வார்கள். ஆனால் மணவிழாவை கிராமம் சிறப்பாக நடத்தும் பொறுப்பை ஏற்றுக்கொள்ளும். பெரிய கிராமம் கிராமதானமானால் பகுதி பகுதியாகப் பிரித்து வேலை செய்வோம். எவ்வளவுக்கெவ்வளவு சிறிய கிராமங்கள் இருக்கின்றனவோ அங்கெல்லாம் பரஸ்பர உணர்வை எ[illegible]துவது எளிது.

## கிராமமே திருமணங்களை நடத்தும்

இன்றைய நிலை என்னவென்று சிந்தித்துப் பாருங்கள். ஒவ்வொரு குடும்பமும் கவலையில் ஆழ்ந்துள்ளது. ஆனால் கிராமதானமாக உருவெடுத்தால் அத்தகைய கவலைகள் எல்லாம் பறந்து போய்விடும். இன்று ஏழைக் குடும்பத்திலுள்ள குழந்தைகள் எவ்வளவு இன்னல்கள் அடைகிறார்கள்? ஆனால் அதே நேரத்தில் எத்தனை வீடுகளில் இன்பமாக இருக்கிறார்கள்? கிராமதானமான கிராமங்களில் இத்தகைய நிலைமை இருக்காது. எல்லாக் குழந்தைகளுக்கும் உணவும், உடையும், ஆதாரக் கல்வியும் கிடைக்கும். திருமணம் நடைபெறுவது மிகவும் அன்பான காரியம். ஆனால் அந்தக் காரியத்தைக்கூட ஒருவருக்கொருவர் பரஸ்பரம் புரிந்துகொண்டு செய்வதுதான் நலமுள்ளதாக இருக்கும். அதனைப்போல கிராமதானம் என்பதனையும் நன்கு தெரிந்துகொண்டு, எல்லோரது பூரண சம்மதம் பெற்றபின்னர் தான் செய்யவேண்டும். கிராமதானம் என்பது பெரிய, அழகிய கருத்து. இந்தக் கருத்தை கருத்துடன் புரிந்துகொள்ளாவிட்டால் நமது செயல் சுமையாக அமைந்துவிடும். திருமணம்கூட ஒருவருக்கொருவர் புரிந்து கொள்ளவில்லையென்றால் சுமையாகிவிடுவதைப் பார்த்திருக்கிறோம்.

## வெண்ணெயை பங்கிட்ட கண்ணன்

பலர் பாபா கிராமத்திற்கு வந்தால் பயப்படுவதாகச் சொன்னார்கள். பாபாவின் அருகில் சென்றால் "எங்கே நிலதானம் கேட்பாரோ" என்று பயந்துகொண்டு வராமல் இருக்கிறார்கள். பாபாவைப் பார்த்து பயப்பட வேண்டிய அவசியமில்லை. பலாத்காரமாக நிலத்தைப் பிரிக்கும் ஆட்கள் இங்கே இல்லை. மக்கள் பூமிதான இயக்கத்தைப் பார்த்து பயப்பட்டால் இயக்கத்தைவிட்டு விட்டு பாபா பாகவதக் கதையையாவது சொல்லலாம். பாகவதம் சொன்னால் தட்சணை கொடுக்க வேண்டுமென்று தயங்குகிறீர்களா? பயப்படாதீர்கள்; பாபா பணத்தைக் கையில்கூட தொடமாட்டார். பாகவதத்தில் பகவான் கிருஷ்ணன் வெண்ணெய்

திருடி உண்ட கதையும், வெண்ணெயை விற்க விடாமல் கிராமக் குழந்தைகளுக்குப் பங்கிட்டுக் கொடுத்த வரலாறும் தானே இருக்கிறது. கிருஷ்ணன் ஒரு சிமானையும் தனியாக வெண்ணெய் தின்ன விடவில்லையே! பாகவதத்தைப் படித்தால் பகவான் திருடிய கதையைத்தானே கூற முடியும்? பூமிதான இயக்கம்தான் பயமில்லாத இயக்கம். நீங்கள் எல்லோரும் பகவானைப் போல திருட ஆரம்பித்தால் என்னவாகும்? உங்கள் வீட்டிலிருக்கின்ற பசுமாட்டைப் போல பாபா பரம சாது. உங்கள் பசுமாட்டிற்கு இருப்பதைப் போல பாபாவிற்கு கொம்புகூட இல்லை; பசுவைப்போல உதைக்கவும் மாட்டார்; நீங்கள் 1/6 பாகம் கொடுத்தாலும் திருப்திப் படுவார்; பூரண கிராமதானம் தந்தாலும் திருப்தியுறுவார். பசு புல் கொடுக்கிற மக்களிடம் அன்பு காட்டுவது போல பாபா உங்களைப் பார்த்து உள்ளம் மகிழ்வார்.

## கூட்டுறவு யோகம்

உங்கள் கஷ்டத்தைப் போக்கும் யுக்தியைக் கூறவே வந்துள்ளேன். இந்தியாவில் உள்ள 5 லட்சம் கிராமங்களுக்கும் பாபா செல்ல வேண்டியிருப்பதால் திரும்பவும் உங்கள் கிராமத்திற்கு வருவது என்பது துர்லபம். காகா சாகப் ஒரு முறை யோகத்தில் சிறந்தது கூட்டுறவு யோகம் என்று கூறினார். கூட்டுறவு என்றால் பலாத்காரமாகக்கூட பலரை ஒன்று சேர்த்துவிடலாம். கூட்டுறவைவிட வள்ளுவர் கூறுகின்ற ஒப்புரவையே சிறந்தது என்று கூறுகின்றேன். எல்லோரும் ஒப்புக்கொண்டு ஒன்று சேர்வதையே ஒப்புரவு என்று குறள் கூறுகின்றது. ஆகையால் எல்லோரும் அன்பாக ஒன்று சேர வேண்டும். ஒரு மனிதன் உலகில் அன்பைத்தான் சம்பாதித்துக் கொள்ளவேண்டும். மனிதன் தேடுகின்ற செல்வமனைத்தும் இறந்த பின்னர் அவனுடனா செல்கின்றது? யாராவது நல்ல மனிதர் ஒருவர் இறந்து விட்டால், இறந்தவருக்காக மக்கள் வருந்தி நல்ல குணங்களை நாட்டு மக்கள் பாராட்டி, அவருக்கு நன்மதிப்புக் கொடுப்பார்கள். அந்த பாராட்டுதலையும், அன்பு கலந்த மொழி

களையும், மக்களின் ஆதரவையும்தான் நாம் சம்பாதித்துக் கொள்ள வேண்டும். ஒரு மனிதன் உலகில் உண்மையாக இறந்ததற்குப் பின்னர் புகழைத்தான், பிறரது போற்றுதலைத்தான் விட்டுச் செல்ல வேண்டும். கஜினி முகம்மது இந்தியாவில் 18 முறை படையெடுத்து வைரங்களையும், முத்துக்களையும் அள்ளிக்கொண்டு சென்று, அரண்மனையில் உள்ள ஒவ்வொரு அறையிலும் குவித்து வைத்தான். இறுதியில் அவன் மரணமடையும்பொழுது இதனையெல்லாம் ஏன் இவ்வளவு கஷ்டப்பட்டுக் கொள்ளையடித்தோம் என்று மனம் வருந்தினான். அவன் பெரிய சக்கரவர்த்தியாயிருந்தும், உலகிலுள்ள சிறந்த செல்வங்களையெல்லாம் கொள்ளை அடித்தும் இறக்கும்பொழுதும் எதுவும் தன்னுடன் வராது என்பதனை அறிந்து அழுதான். ஆகையால் அன்புடன், இரக்கத்துடன், வாழக் கற்றுக்கொள்ள வேண்டும். கிராமதானத்தைவிட பிரேமதானத்தையே பெரிதாக எண்ணுகிறேன்.

ஒரு கிராமத்தில் இருக்கின்ற குழந்தைகள் அனைத்தையும் தன்னுடைய குழந்தைகளாகவே ஒரு தாய் கருத வேண்டும். அதைப்போல ஒவ்வொரு குழந்தையும் ஒவ்வொரு பெண்மணியையும் தன்னைப் பெற்ற தாயாகவே கருதி, அவள் ஏதாவது வேலை சொன்னால் அன்புடன் செய்ய வேண்டும். அப்பேர்ப்பட்ட நிலைமையை ஏற்படுத்தத்தான் பாபா வந்திருக்கிறார். பாபா வந்துவிட்டாரே என்று பயந்துகொண்டு இருந்தீர்களானால், இத்தனை ஆயிரம் மைல் நடந்து வந்த நான் உங்கள் வீட்டிற்கே வரமாட்டேனா? தமிழகத்தில் கோவில் இல்லாத ஊரே கிடையாது. கோவிலை மையமாகக்கொண்டே ஒவ்வொரு கிராமமும் அமைந்திருக்கிறது. ஆதலால் தமிழ்நாட்டு மக்களை பக்தர்கள் என்றே கருதுகிறேன். அன்பு மொழிதான் பெரிய மொழி; அம்மொழி அனைவருக்கும் தெரிய வேண்டும். அம்மொழியினை நீங்கள் படித்திருப்பதனால்தான் பாபாவை அன்புடன் வரவேற்றீர்கள்.

[களியாம்பூண்டியில் 16–6–'56ல் வினோபாஜி பேசியதின் சாரம்]

# கிராமதானத்தின் சில லாபங்கள்

1. தெலுங்கானாவில் 1951-ல் உதித்த பூதானத்திற்கு ஒரிஸ்ஸாவில் 1955-ல் கிடைத்த நூற்றுக்கணக்கான கிராமதானம் சிகரம்போல் அமைந்தது. பூதானக் கருத்தின் வித்து கிராமதானமாக மலர்ந்துவிட்டது.

2. கிராமதானமே முழு கிராம வளர்ச்சிக்கு உயர்ந்த வழி. கிராமதானமே கிராம சுயராஜ்யத்திற்கு அஸ்திவாரம்.

3. கிராமத்தில் ஒரு வீட்டையும் வேறு வீட்டையும் பிரித்துவந்த குறுகிய மன வேற்றுமை என்ற சுவர் இடிந்துவிடும். கிராமமே ஓர் குடும்பமாக ஆகிவிடும்.

4. கிராமமே குடும்பமாகிவிட்டால், கிராம நிலம், அதன் விளைச்சல், தனம் எல்லாம் கிராம சமுதாயத்தைச் சாரும்.

5. வீட்டில் நடந்துவந்த கல்யாணம் கிராமக் கல்யாணமாகும், கல்யாணம், இதர விசேஷங்கள், எல்லாவற்றிற்கும் கிராம சமுதாயமே செலவு செய்யும். தனிப்பட்டவர்களுக்கு இதற்காகக் கடன் சுமையோ, கவலையோ இராது.

6. குழந்தைகளின் கல்வியின் நிர்வாகத்தையும் செலவையும் கிராம சமுதாயமே பார்த்துக்கொள்ளும். கிராமவாசிகளின் ஆரோக்கிய வாழ்க்கைக்கும், வியாதியஸ்தர்களைக் கவனிக்கவும் வேண்டிய ஏற்பாடு கிராம சமுதாயம் செய்யும். வியாதி சிகிச்சைக்கு தனிப்பட்டவருக்கு செலவும் கடனும் இராது. எல்லா நன்மையும் தீமையும் எல்லோரும் பங்கிட்டுக்கொள்வதால் தனிமனிதனின் வாழ்க்கையின் கஷ்டம் குறையும். கிராமவாசிகள் எல்லோரும் ஒரு குடும்பத்தினராயிருப்பதால் ஏற்றத்தாழ்வு, ஜாதி வேற்றுமை, முதலியவைகளுக்கு இடமில்லை.

7. கிராமத்தின் தொழிலை சமுதாயம் பாதுகாப்பதால் வேலையில்லாத் தொல்லை மறைந்துபோகும்.

8. கிராமநிலத்தில் 'எனது', 'உனது' என்ற மனத்தில் உதித்த வரப்புகள் எல்லாம் பனிபோல் மறைந்து போகும்.

9. தனித்துண்டு நிலச் சாகுபடிக்கு அவசியமில்லை, கூடுமானவரை சாகுபடிக்குச் சௌகரியமாக துண்டு நிலங்களைச் சேர்த்து பயிரிடலாம்.

10. பயிரிடுதல், கண்காணிப்பு, மகசூல் செய்வதற்கெல்லாம், தனியாக மாடு வைத்துக்கொண்டு சிறு துண்டு துண்டாக விவசாயம் செய்வதில் ஏற்படும் நஷ்டமோ கஷ்டமோ இராது.

11. விளைந்தது, விளையவில்லை, என்ற தனிக்கஷ்டமோ, நஷ்டமோ, கடனோ என்ற தனிப்பட்டவனுக்கு மன வேதனை இராது. எல்லாவற்றையும் எல்லோரும் தேவை அளவுக்கு, பங்கிட்டுக் கொடுக்கப்படும். விளைச்சல் போதாவிட்டால் இருப்பதை எல்லோரும் பங்கிட்டு சந்தோஷமாக அனுபவிப்பார்கள்.

12. விளைச்சலை வெளி வியாபாரி குறைந்த விலைக்கு, பெரும்படிக்கு அளந்து லாரியில் ஏற்றிப்போகாமல் கிராம சமுதாயம் பாதுகாக்கும்; ஆகவே வெளிச் சுரண்டலால் கிராமத்திற்குள் விலைவாசி மூலம் ஏமாற்றமோ பஞ்சமோ ஏற்படாது.

13. ஒரு கிராமத்தின் உபரி பக்கத்து கிராமத்திற்குக் கொடுக்க உதவும். ஒரு கிராமத்தில் உள்ளதைக் கொடுத்து தங்களுக்கு வேண்டியதை பக்கத்து கிராமத்திலிருந்து பண்டமாக மாற்றிக்கொள்ளலாம்.

14. கிராம நிலம் பொதுவானது. கிராமவாசிகள் அதில் உழைத்து வாழ்வதற்காக ஏற்பட்டது. ஆதலால்

நிலத்தை பேரம் பேசி பணத்திற்கு விற்பதும் — அதில் வேலை செய்பவனை அடிமைப் பண்ணையாளாக ஆக்கும் காலம் இனி இராது.

15. நகரத்தில் உட்கார்ந்துகொண்டு, வேறு தொழிலுடன் ஜீவனம் செய்கிறவர்கள் கிராம மகசூலையும் அனுபவிக்க கிராமவாசிகள் இனி அனுமதிக்க மாட்டார்கள். எல்லோரும் நிலத்தை உழுது பூமியைத் தொழலாம்.

16. கிராமத்துக் கூட்டுறவு வாழ்க்கையில் சச்சரவுகளுக்கு இடம் இராது. இருந்தாலும் குடும்பச் சண்டைகளாக தோன்றி குடும்பச் சண்டைகளைப்போல் தீர்க்கப்படும். வக்கீலுக்கு இடமில்லை. கோர்ட்டுக்கு இடமில்லை. அதிகாரிகளின் ஆதிக்கத்திற்கு இடமிராது.

17. கூட்டுறவு வாழ்க்கையில், சுயநலமற்ற உத்தம தொண்டனையே கிராமத்திற்குத் தலைவனாக இருக்க மக்களே அழைப்பார்கள். தேர்தலும் போட்டியும் ஜாதிச் சண்டையும் இராது. அரசியல் கட்சிகளின் சூதாட்டத்திற்கு இடமிராது. கிராமத்தில் கிராம கம்யூனிசம், அஹிம்சா கம்யூனிசம், தர்மத்தின் அடிப்படையில் உள்ள கம்யூனிசம்; உண்மையான ஜனநாயகம் ஏற்படும்.

YZW M05
N54

| | | | | |
|---|---|---|---|---|
| | | ரூ. | அ. | பை. |
| 24 | சிரமதானம்—சிவாஜி பாவே ... | 0 | 4 | 0 |
| 25 | ஒன்றுபட்டாலுண்டு வாழ்வு—விநோபா ... | 0 | 2 | 0 |
| 26 | மங்கரோட்—முதல் (கிராமதானம்) ... | 0 | 4 | 0 |
| 27 | பூதான வெள்ளம் ... | 0 | 8 | 0 |
| 28 | சர்வோதய ஆதாரங்கள் ... | 0 | 4 | 0 |
| 29 | உழைப்புதானம்—சிவாஜி பாவே ... | 0 | 4 | 0 |
| | ஆக மொத்தம் ... | 5 | 11 | 0 |

ஒரு செட் விலை ரூ. 5

★


சர்வோதய பூதானப் புரட்சிக்கு

★ சர்வோதயம், தஞ்சாவூர்

மாதப் பத்திரிகை : ஆரம்பம் 1947

வருட சந்தா ரூ. 3 தனிப்பிரதி அணா 4

★

★ கிராமோதயம், திருப்பூர்

வாரப் பத்திரிகை :

வருட சந்தா ரூ. 3 : தனிப்பிரதி அணா 1

வெளியிடுபவர் : சர்வ சேவா சங்கம், காந்திநகர், திருப்பூர்

எல்லா காதி வஸ்திராலயங்களிலும், பூதான ஊழியர்களிடமும் கிடைக்கும்.


கூட்டுறவுப் பதிப்பகம், தஞ்சை.